EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 53

## பிரயாகை புதினத்தில் காணலாகும் உத்திக்கூறுகள்

***நெறியாளர் முனைவர் அ.விமலா***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*பரமத்தி வேலூர் - 638182,*
*நாமக்கல் (மாவட்டம்).*
***ஆய்வாளா ப.வளர்மதி***
*பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி,*
*பரமத்தி வேலூர் - 638182, நாமக்கல் (மாவட்டம்).*

## *முன்னுரை*

இலக்கிய வகைமைக்குச் சுவை சேர்ப்பதே உத்திகள்தான் எனலாம். ஓர் இலக்கியம் சிறப்பாகப் போற்றப்படுவதற்குக் காரணம் அவற்றில் கூறப்படும் கருத்தே முக்கியக் காரணம் வகிக்கின்றது. வெறுமனே கருத்தை மட்டும் எடுத்துக் கூறினால் வாசகர் புரிந்து கொள்ள முடியாது. இதனைத் தெரிந்த கவிஞர்கள் இயற்கை, வடிவம், சொல்லாட்சி, ஓசை நயம், கருத்து, கற்பனை, உவமை, படிமம், குறியீடு போன்ற பலவயைhன முறைகளைக் கையாளுகின்றனர். இவையே உத்திகள் என அழைக்கப்படுகின்றன. அவ்வகையில் ஜெயமோகனின் 'பிரயாகை' புதினத்தில் காணலாகும் உத்திக்கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## புதினங்களில் புலப்பாட்டு உத்திகள்

"இலக்கிய ஆக்கத்திற்கும் படைப்பாளன் மேற்கொள்ளும் பல்வேறு அணுகுமுறைகள் சிறு கூறாகவும், முழுமையாகவும் சொல்லாகவும், கருத்தாகவும் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கும் தன்மை உத்தியாகும்' ' 1 என்ற கூற்றிற்கு ஏற்ப இன்றைய படைப்பாளிகள் பலவிதமான உத்திகளைப் பயன்படுத்தித் தமது வெளிப்பாட்டுத் திறனை , படைப்பின் பயனை வெளி உலகுக்குப் பறை சாற்றிக்

கொண்டு இருக்கின்றனர். தொடக்கக் காலத்தில் பாட்டி சொன்ன கதை, விக்கிரமாதித்தன் கதை என்ற வகையில் கதைகள் தோன்றின. அதன் பின்னர் அரசர்களின் வாழ்வை மையமிட்ட கதைகள் எழுந்தன. அரச குடும்பக் கதைகளை மட்டும் மக்கள் விரும்பிப் படித்ததால் அக்கதைகளே மிகுதியாயின. அரசவாழ்வை காட்டும் பின்னணி மக்களை மிகுதியாகக் கவர்ந்த ஜெயமோகன் இவ்வகையில் பிரயாகை புதினத்தைப் படைத்துள்ளார்.

படைப்பாளன் தான் கூற விரும்பும் கருத்துக்ளை மக்கள் மனத்தில் பதிய வைக்க எண்ணுகிறான். அதற்காகப் சொல்லும் முறையில் சில உத்திகளைக் கையாளுகிறான். "இலக்கியத்தில் உத்தி என்பது கூற விரும்பும் பொருளை நேரடியாகக் கூறாது அதனை விளக்குவதற்குப் பொருத்தமான அல்லது இணையான மற்றொரு பொருள் மூலம் பெற வைத்தல்' ' 2 என்ற கூற்றின் மூலம் படைப்பாளன் தான் கூறக் கருதிய பொருளை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் நுணுக்கமே உத்தி என்பதை உணர முடிகிறது

## உத்தி நிலைகள்

இலக்கியத்தில் இடம் பெறும் உத்திகளில் பொருட்கூறு மட்டுமல்லாது ஏதேனம் ஒரு நோக்கமும் அமைந்திருக்கும். 'படைப்பான் ஏதேனும் ஒரு நோக்கம் குறித்து ஒரு சொல், தொடர், பொருண்மை, கருத்து, பொருள், உணர்வு, பாத்திரம், செயல், நிகழ்ச்சி, இடம், காலம், கனவு, கடிதம், வருணனை, விளக்கம், ஆடல், பாடல், காட்சி, நிறம் என ஏதாவது ஒன்றினைக் கையாளும் போது அதில் உத்தி காணப்படுகிறது.'3 என்கிறார் ச.வே. சுப்ரமணியன்.

## உத்தியின் வகைகள்

புதின இலக்கியத்தில் நோக்குநிலை உத்தி, பின்னோக்கு உத்தி, முன்னோக்கு உத்தி, உச்சத்தைத் தொடரும் அழுத்த நீக்க உத்தி, கூற்று உத்தி, வெளியீட்டு உத்தி, கடித உத்தி, தொகையுரை காட்சி, நினைவுக் காட்சி, காலவுணர்வு உத்தி போன்ற உத்திகள் இடம் பெறுகின்றன. ஒலி உத்தி, சொல் உத்தி, பொருள் உத்தி, தொடர் உத்தி, வெளியீடு உத்தி, அணி உத்தி, வடிவ உத்தி, கடித உத்தி, அமைப்பு உத்தி, நடைமுறை உத்தி எனப் பலவகைகளாக உத்தி அமைகின்றது.

## நடை விளக்கம்

நடையைப் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களைத் தருகின்றனர். கருத்து விளக்கத்தின் கருவியே நடையாகும். படைப்பாளர் எதை உணர்த்த வேண்டுமென்று நினைக்கிறாரோ அது படிப்பவரின் மனத்தில் ஆழமாகப் பதிவதற்கு உதவுவது நடை என்று அழைக்கப்படுகிறது. நடையின் சிறப்பு குறித்து, "இலக்கியத்தின் உயிர் நாடியாக இருப்பது மொழி நடையே, கருத்துக்களைக் கூறும் போது தான் நடை சிறக்கும் என்பதை உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருத்தி

நடைப்பதே நடை' '4 என்று நடையின் சிறப்பைக் சுந்தரமுர்த்தி கூறுகிறார். "ஒரு புதினத்தின் வெற்றிக்கு அடிப்படையிலான இயல்புகளில் ஒன்று நடைச் சிறப்பு. புதினத்தில் கதைப் பின்னல் சிறப்பாக அமைந்து நிகழ்ச்சிகள் எதிர்பார்ப்பு நடத்துவதாக அமைந்திருந்தாலும் அதை எடுத்தவர் முடிக்கும் வரை தொடர்ந்து படிக்கச் செய்வது ஆசிரியர் நடை. சொற்கள் இணைந்து சுவை மிகுந்த வருணனையாக உரையாடல்களாக நிகழ்ச்சி விளக்கங்களாக உணர்ச்சி ஓவியங்களாக வெளிப்பட்டுப் படிப்போரைப் புதினத்தில் ஈடுபடுத்துவது நடையே."5

கரு, உரு ஆகியவற்றிற்கிடையே காணப்படும் உறவு எத்தகைய உத்திகளால் பின்னப்படுகிறதோ அவ்வுத்திகளின் ஒட்டு மொத்தத்தை நடைக் கூறுகளாக ஏற்றுக் கொள்ளலாம். ஒருவருடைய படைப்பாற்றலை அவர் நடையின் மூலமும் அளவிட முடியும்.

"நல்ல நடை என்பது படிப்பவரைக் கடைசி வரை சலிப்பூட்டாமல் தன்னோடு இழுத்து செல்ல வேண்டும். இந்த ஈர்ப்பு சக்தி, நடையில் காணப்படவில்லை என்றால் அது நல்ல நடையென்றே சொல்வதற்கில்லை. தொடர்பில்லாத வாக்கிய அமைப்புகள், மிகையான போக்கு, வாசகரக் கவர வேண்டும் என்பதற்காகப் பிரயோகப்படுத்தப்படும் சப்த ஜாலங்கள் இவை அனைத்துமே படிப்போருக்குத் தளர்ச்சியை உண்டாக்கும். இவ்வகைக் குற்றங்கள் ஏதுமின்றி இயல்பானதாகவும் கருத்துக்கள் கருக்கெண்டதாகவும் எளிமை, இனிமை, முதலிய பண்புகளோடு இயல்வதே சிறந்த நடை. 'நடை' ஒரு வலை போன்றது." 6 என்று மா. இராமலிங்கம் 'நாவல் நடையியல்' எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

"நடை என்பது பலராலும் ஒத்துக் கொள்ளக் கூடிய விளக்கம் கிடைக்கவில்லை. எனினும் கரு, உரு ஆகியவற்றிற்கு இடையே காணும் உறவு எத்தகைய உத்தி முறைகளில் பின்பற்றப்படுகிறதோ அவ்வுத்திகளின் ஒட்டு மொத்தத்தை நடைக் கூறுகளாக ஏற்றுக் கொள்ளலாம்"7. என்று கூறுவர்.

பல்வேறு அறிஞர்கள் பல கருத்துக்களைத் தந்துள்ளனர். படைப்பாளர்கள் வாசகர்களை எளிதில் படிக்கச் செய்யவும், முழுமையாகப் புரிந்து கொள்ளவும் இலக்கிய மொழி நடையே பயன்படுகின்றன. அக்கால நடையே அக்காலக்கட்டத்தின் சிறந்த நடையாக அமைகின்றன.

## நடையின் முக்கியத்துவம்

ஒவ்வொரு படைப்பின் சிறப்பிற்கும் நடையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. நடையானது படைப்பாளியின் முகம் காட்டும் கண்ணாடியாகும்.

"இலக்கிய வடிவம் இயற்கையாகவோ தன்னியல்பாகவோ அமைவதன்று என்பதை உணர வேண்டும். இலக்கியம் ஒரு கலை, அதன் வடிவம் உன்னிப்பாகவும் சிந்தித்தும் அமைக்கப்படுவதாகும்."8

என்று தா.ஏஞானமூர்த்தி அவர்கள் நடையைப் பற்றியும் அதன் இன்றியமையாமையையும் விளக்குவதைக் காணலாம்.

## ஜெயமோகனின் மொழி நடை உத்தி

ஜெயமோகன் தமது பிரயாகை புதினத்தில் மொழி நடை, உத்திகள் பலவற்றைப் பயன்படுத்தித் தனித்திறனைத் தந்துள்ளார். அவரது மொழி நடை கருத்திற்கு எளிமைத் தன்மையையும், படைப்பிற்கு முருகியல் தன்மையையும் தந்துள்ளது எனலாம். அவரது எழுத்துக்கள் படிப்பவரின் உள்ளத்தில் பதிந்து உணர்வுகளைத் தூண்டக் கூடிய ஆற்றல் பெற்றவையாய் அமைகின்றன.

“நாவலாசிரியன் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும் அவர் நாவலில் உத்திகள் நுட்பமாகக் கையாள்படவில்லையென்றால் நாவல் சிறப்படைவதில்லை.”9

என்னும் கருத்திற்கேற்ப புதினம் மட்டுமின்றி பல்வேறு இலக்கியவகைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் ஜெயமோகன்.

## பேச்சு நடை

ஜெயமோகன் அவர்களின் பிரயாகை புதினத்தில் கதைக்களம், காலம், மக்கள், சூழல் இவைகளுக்கு ஏற்பவும், பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்பவும், மொழி நடை அமைக்கப்பட்டுள்ளது. கதை நிகழ்வுகளுக்கு ஏற்பப் பொருத்தமான பேச்சு நடை வழக்கை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

“ஓர் ஆசிரியரின் நடை என்பது அவர் கையாளும் மொழியின் அமைப்பும் முறையும் ஆகும். இது அவர் அமைக்கும் சொற்களாலும் தொடரமைப்புக்களாலும் உருவாக்கப்படுவதாகும்.”10 மேலும்,

“மொழி நடை என்பது எழுத்தாளனின் உளப்பாங்கும் உணர்ச்சியும் எப்படியோ அப்படியே அமைவது என்றும் மொழி நடையே எழுத்தாளன் என்றும் எழுத்தாளனே மொழிநடை’ ’ 11 என்பர்.

## சொல் உத்தி

பிரயாகை புதினத்தில் சொல் உத்தியை மிக அழகாக ஜெயமோகன் கையாண்டுள்ளார். உதாரணமாக, உத்தானபதன் தன் மனசாட்சியில் சுநீதியை வைத்துப் பார்க்கும் மனிதநேயத்தைக் காணமுடிகிறது. மேலும் சுநீதியின் மகன் துருவன் உத்தானபாதனால் கைவிடப்பட்டவன். இருப்பினும் தன் உரிமையைப் பறிக்கும் உத்தமனையும் சுருசியையும் வாழ்த்துகிறான். இது மனித நேயமிக்க செயலாகும். இதில் கையாண்டுள்ள சொல் உத்தியை,

"துருவன் புன்னகையுடன் திரும்பி உத்தமன் தலையைத் தொட்டு "நலம் பெறுக!" என்று வாழ்த்தினான். சுருசியின் தலையைத் தொட்டு "நிறைவடைக" என்ற வாழ்த்தி விட்டு நடந்து சென்றான். நகரெங்கும் செய்திகேட்ட மக்கள் அவன் செல்லும் சாலையின் இருமருங்கும் நின்று கைகூப்பி வாழ்த்தொலி எழுப்பினர். அன்னையர் கண்ணீர் விட்டு அழுதனர்." (பிரயாகை, ப.34) என்ற கூற்றினால் அறியலாம்.

# வெளியீட்டு உத்தி

பிரயாகை புதினத்தில் வெளியீட்டு உத்தியை மிக அழகாக ஜெயமோகன் கையாண்டுள்ளார். உதாரணமாக, நம்பினவரை ஏமாற்றுவது தன்னுடைய மனசாட்சியையே ஏமாற்றுவதற்குச் சமம். ஒரு பொருளைத் தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டுத் தர மறுப்பதும், ஒருவர் மீதுதவறான செய்திகளைக் கூறுவதும் போன்ற குணம் படைத்தவர்கள் இச்சமுதாயத்தில் காணலாம்.

இப்புதினத்தில் சகுனி பண்டவர்களை சூழ்ச்சியால் வெல்ல நினைக்கிறான். ஆதலால் பாண்டவர்கள் மீது பழிசுமத்தியும், திரொபதியைத் திருமணம் செய்ய தகுதியில்லை என்பது போலவும் மக்களிடையே தன் ஒற்றன் மூலம் பரவச் செய்கிறான். இதில் ஜெயமோகன் வெளியீட்டு உத்தியைக் கையாண்டுள்ளதை, "சகுனி அவரது ஒற்றர்கள் வழியாக அந்தப் பேச்சை வழிநடத்தினர். பஞ்சால இளவரசியை மகத மன்னன் மணம் செய்து கொள்ளப் போவதாக முதலில் செய்தி பரவியது. எதிர்ச்செய்திக்கே உரிய விரைவுடன் அது நகரை மூடிக்கொண்டது. பதற்றமும் கொந்தளிப்புமாக மக்கள் கூச்சலிட்டனர்." (பிரயாகை, ப.782)

என்று ஆசிரியர் சகுனியின் வஞ்சனைக் கூற்றின் மூலம் வெளியீட்டு உத்தியை அறியலாம்.

# பண்பாட்டு உத்தி

தமிழரின் ஆய கலைகள் அறுபத்தி நான்கு கலைகள் ஆகும். பிரயாகை புதினத்தில் பல கலைகள் இடம் பெற்றுள்ளன. கட்டுமானக் கலை, அழகுக்கலை, போர்க்கலை போன்றவை இடம்பெற்றுள்ளன. அதில் மலரம்புக்கலை என்பதும் ஒருவகை. விழாக்கலங்களில் விண்ணில் அம்புகளை விடுவர். அது இலக்கை வீழ்த்திய பின் தரையிறங்கும் அழகுக்காக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை பண்பாட்டு உத்தியில், "போருக்கான கலை அல்ல மலரம்புக்கலை, அலங்காரத்துக்கானது. விழாக்காலங்களில் விண்ணில் இலக்கை வீழ்த்தியபின் அம்புகள் தரையிறங்கும் அழகுக்காக கண்டடையப்பட்டது. நூற்றெட்டு மலர்களின் இதழமைப்புகள் அதில் வகுக்கப்பட்டுள்ளன." (பிரயாகை,ப.65) என்னும் கூற்றின் மூலம் குறிப்பிடுகிறார்.

## நனவோடை உத்தி

பிரயாகை புதினத்தில் நனவோடை உத்தியை மிக அழகாக ஜெயமோகன் கையாண்டுள்ளார். உதாரணமாக, உத்தானபாதன் தன் இரண்டாவது மனைவியுடன் இருக்கும்போது குற்ற உணர்ச்சியானது அவனைத் தடுக்கிறது. முதல் மனைவியின் நினைவு வருகிறது. அதனால் வெறுக்கிறான். இதனை நனவோடை உத்தியில் படைத்துள்ளதை,

"உத்தானபாதன் ஒருத்தியுடன் இருக்கையில் இன்னொருத்தியின் நினைவாகவே இருந்தான். சுருசியின் காமத்தில் இருக்கையில் சுநீதியை நினைத்து கசந்தான். அக்கசப்பாய் சுருசியுடன் மேலும் நெருங்கினான். அவளுடைய உடலின் மறைவுகளுக்குள் புதைந்து கொண்டான். அதன் வழியாக அவள் உள்ளத்தை மேலும் நெருங்கி விட்டதாக எண்ணிக் கொண்டான். சுநீதியுடன் இருக்கையில் சுருசியை எண்ணி ஏங்கினான்." (பிரயாகை, ப.13) என்ற கூற்றின் வாயிலாக அறியலாம்.

## அறிவுரை உத்தி

பிரயாகை புதினத்தில் அறிவுரை உத்தியை மிக அழகாக ஜெயமோகன் கையாண்டுள்ளார். உதாரணமாக, முன்னோர் வழிபாட்டின் அடிப்படையானது மரணத்திற்குப் பின்னும் அவ்வுயிர் வாழும் என்று நம்புகின்றனர். வழிபாடு செய்யவில்லையென்றால் அடுத்த தலைமுறையினரை துன்புறுத்தும் என்பதை அறிவுரை உத்தியில்,

"மூத்தோர் வணக்கத்தையும் நீத்தோர் வழிபாட்டையும் ஒரு சமூகம் கைவிடுமென்றால் ஒரு தலைமுறைக்குள்ளேயே அங்கே ஒரு நல்லரசு இல்லாமலாகும். அங்கே படைக்கலங்களின் அதிகாரம் மட்டுமே எஞ்சியிருக்கும்."[5] என்று தருமன் அர்ஜுனனிடம் கூறும் கூற்று அறிவுறுத்தியுள்ளார்.

## முடிவுரை

பிரயாகை புதினத்தில் மேற்சொன்ன கருத்துகளின் வாயிலாக ஜெயமோகன் பல வகையான உத்திகளைக் கையாண்டுள்ளமையை அறிய முடிகின்றது. உத்திகள் ஓர் இலக்கியத்தைச் சுவைபட ரசித்துப் படிப்பதற்கும் செய்திகளை மனதில் மறக்காமல் பதிய வைத்துக்காள்வதற்கும் பயன்படுவதை அறிஞர்கள் கூற்றுகள் சுட்டிச் செல்வதை அறிய முடிகின்றது. பிரயாகை என்பது ஒரு மிக பெரிய கதைக் கருவினை தாங்கிய நீண்ட புராணக்கதை என்பதால் அதனை மனங்கொள்வதற்கு ஆசிரியர் ஜெயமோகன் இயல்பாகவே பல உத்திகளைப் படைத்து கூறியுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

# அடிக்குறிப்புகள்

1.சுப்பிரமணியன், ச.வே. இளங்கோவின் இலக்கிய உத்திகள் ப.99

2.இரா. தமிழரசி, தமிழ் இலக்கிய உத்திகள் ஓர் அறிமுகம் ப.44

3.ச.வே. சுப்பிரமணியன் , இளங்கோவடிகள் இலக்கிய உத்திகள் ப.6

4.அருள்ராஜ் (ப.ஆ தமிழியம் ப.362

5.பூவண்ணன், கல்கியின் வரலாற்று நாவல்கள் ப.203

6.இராமலிங்கம், மா. நாவல் இலக்கியம் ப.160,161

7.அருள்ராஜ் (ப.ஆ) தமிழியம் ப.364

8.ஞானமூர்த்தி தா.ஏ இலக்கியத் திறனாய்வியல் ப. 185

9.இராமலிங்கம் மா.நாவல் இலக்கியம் ப.144

10.இரா. மோகன், கு.ப. ராஜகோபலன் சிறுகதைகள் ப.157

11.அ.கி. பரந்தாமனார் , நல்ல தமிழ் வேண்டுமா, ப.324